பா.ஜ.க.வோடு

அ.தி.மு.க. கூட்டணிக்குக் காரணமே பழனிசாமியின் குடும்பம் தானே!

அடிப்படை அறிவும் இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, மே 22–

“பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்ததற்குக் காரணம் பழனிசாமியின் குடும்பம்தானே” என்றும்“படுத்தேவிட்டாரய்யா...” என்ற சொல்லுக்கு மொத்த உருவமே கூவத்தூர் பழனிசாமி என்றும் முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்திற்குத்தான் செல்கிறார் அமித்ஷா வீட்டுக்கு அல்ல என்ற அடிப்படை அறிவுகூட இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் என்பது சாபக்கேடு என்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ரெய்டைப் பார்த்து யாருக்குப் பயம்? எனச் சூனா பானா ரேஞ்சில் கோழை பழனிசாமி எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கிறார். 2031 சட்டமன்றத் தேர்தல் வரையில் பாஜகவோடு கூட்டணி இல்லை எனப் பேசிய வீராதி வீரர் யார்? கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பாஜக கூட்டணி கிடையாது என விதவிதமான மொழிகளில் நீங்கள் பேசிய வீடியோக்கள் இன்றைக்கும் ட்ரோல் ஆகிக் கொண்டிருக்கிறது. அது உங்கள் முகத்திரையைக் கிழிக்கும் கண்ணாடிதானே! அது உங்களைப் பார்த்துத்தானே சிரிக்கிறது.

தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளுக்கு டெல்லி செல்லாத நீங்கள், உங்கள் மகன் மிதுனுக்காகதானே அமித்ஷாவை போய் பார்த்தீர்கள். ரெய்டில் குடும்பம் சிக்கி விடக் கூடாது என்பதற்காகத்தானே பாஜகவோடு கூட்டணி வைத்தீர்கள். அதற்குக் காரணம் உங்கள் குடும்பம் தானே?

வீராவேசமாகப் பேசிய ‘சூனாபானா’

“பாஜகவோடு வரும் சட்டமன்றத் தேர்தலிலும் கூட்டணி இல்லை” என வீராவேசமாகப் பேசிய ‘சூனா பானா’ எடப்பாடி பழனிசாமி, வெள்ளைக் கொடியை அல்ல, காவிக் கொடியை ஏந்திக் கொண்டு போனார். கார்கள் மாறி மாறி கள்ளத்தனமாக அமித்ஷாவை டெல்லியில் போய் பார்த்த சூராதி சூரர் அல்லவா பழனிசாமி!

தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு தேவை என்றால் போகாத பழனிசாமி, தன் குடும்பத்திற்குப் பாதிப்பு என்றதும் டெல்லிக்கு ஓடிச் சென்று அமித்ஷாவின் காலடியில் அதிமுகவை அடகு வைத்தார். கடந்த ஜனவரி 12ம் தேதி எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ராமலிங்கம் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் 750 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. ராமலிங்கம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தொடர்பாக 26 இடங்களில் நடந்த சோதனையில் 10 கோடி ரூபாய் ரொக்கம், ஆவணங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டது.

அன்று முதல் கைது காய்ச்சலில் பயந்து வெள்ளைக் கொடிக்கு வேலை கொடுத்தவர்தான் பழனிசாமி. அந்த வழக்கில் இருந்தும் அமலாக்கத்துறை, வருமானவரித்

துறை சோதனைகளில் இருந்தும் தப்பிக்கவும் பாஜக கூட்டணிக்குத் தாவியவர்தான் பழனிசாமி.

“படுத்தே விட்டாரய்யா கூவத்தூர் எடப்பாடி பழனிசாமி!

“படுத்தே விட்டாரய்யா...” என்ற சொற்களுக்கு உருவமே கூவத்தூர் எடப்பாடி பழனிசாமிதான். அந்த கூவத்தூரில் கற்ற கலையை அமித்ஷா வீட்டு வாசல் வரையில் போய் அரங்கேற்றினார். முதலமைச்சர் நிதி ஆயோக் கூட்டத்திற்குத்தான் செல்கிறார். அமித்ஷா வீட்டுக்கு அல்ல என்ற அடிப்படை அறிவுகூட இல்லாதவர் தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர் என்பது சாபக்கேடு. நாடகங்களை வைத்து அரசியல் செய்யலாம் எனும் பகல் கனவில் அடுக்கடுக்கானப் பொய்களை வைத்து பித்தலாட்ட அரசியல் செய்து கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு அனைத்திந்திய அளவிலேயே பாஜகவின் பாசிச அரசியலுக்கு எதிராகப் போர்க்குரல் கொடுத்துக் கொண்டிருப்பவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் என்பதை உலகறியும். ஊழலில் முதுகலைப் பட்டம் பெற்று, ஊதாரி ஆட்சி நடத்தி பாஜகவிடம் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் பழனிசாமிக்கு டெல்லி பயணம் என்றால் தவழ்ந்து செல்வது மட்டும் தானே தெரியும்.

ஊர்ந்து செல்லும் உயிரினங்களுக்கே சவால் விடும் வகையில் பாஜகவின் கால்களில் ஊர்ந்து சென்று அடிமை ஊழியம் செய்யும் பழனிசாமி தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து நிற்கும் முதலமைச்சரைப் பார்த்துப் பேச அருகதை இருக்கிறதா?

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் புகார் கொடுத்த பெண்களின் பெயர்களை அரசிதழில் வெளியிட்டுப் பாதிக்கப்பட்ட பெண்களை மிரட்டிப்பார்த்த பழக்கத்தில், அண்ணா பல்கலைக்கழக வழக்கில் ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் NIC நிறுவனமே அளித்த விளக்கங்களை மறைத்து பச்சைப் பொய்யைக் கூசாமல் அடித்து விடுகிறார் பழனிசாமி. அண்ணாநகர் சிறுமி பாலியல் வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் ஒருவர் அதிமுகவின் வட்டச் செயலாளர் என்பதை மக்கள் மறந்திருப்பார்கள் நினைத்துக் கொண்டாரா பழனிசாமி?

பாலியல் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்த பழனிசாமி!

பொள்ளாச்சி தொடங்கி அண்ணாநகர் பாலியல் வழக்கு வரை பாலியல் குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்துப் பாதுகாத்த பழனிசாமி, பெண்களுக்குத் தற்போது தமிழ்நாட்டில் பாதுகாப்பில்லை என விஷமப் பிரச்சாரத்தைச் செய்து மடைமாற்றலாம் என மடத்தனமான அரசியல் செய்தால் மக்கள் நம்பிவிடுவார்களா?

தமிழ்நாட்டில் நீட்டை நுழைத்துப் பல மாணவர்களின் உயிர்கள் பறிபோகக் காரணமான பழனிசாமி, திமுக கொடுத்த அழுத்தத்தையும் எதிர்ப்பையும் சமாளிக்க முடியாமல் கொண்டு வந்ததுதான் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு உள் இடஒதுக்கீடு. அதற்காகச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் காலதாமதம் செய்த போது ஆளுநரை எதிர்த்து திமுக போராட்டம் நடத்தியது. அன்றைக்கு அதிமுக ஆளுநரை எதிர்க்கக் கூட துணிவில்லாமல் தூங்கி கொண்டிருந்தது. மருத்துவப்படிப்புக்கு மட்டும் இருந்த உள் ஒதுக்கீட்டைப் பொறியியல் உள்ளிட்ட பல்வேறு தொழிற்படிப்புகளுக்கு நீட்டித்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களைப் பலனடையச் செய்து வருவது திராவிட மாடல் அரசு.

நீட்டை நுழைத்து தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைக் காவு கொடுத்த அதிமுகவினர் வெட்கித் தலைகுனியாமல் வீர வசனங்கள் பேசித் திரிவது வெட்கக் கேடு. நீட், உதய் மின் திட்டம், மூன்று வேளாண் சட்டங்கள், ஒரே நாடு ஒரே தேர்தல், மற்றும் தேசியக் குடியுரிமை சட்டம் (CAA) போன்றவற்றிற்கு ஆதரவு அளித்து துரோகம் என்றால் பழனிசாமி, பழனிசாமி என்றால் துரோகம் என துரோக ஆட்சி நடத்திய துரோகி பழனிசாமி மாநிலத்தின் உரிமைகளுக்காக நாளும் போராடிக்கொண்டிருக்கும் திமுக கழகத்தைப் பார்த்து குற்றம் சொல்ல எந்த அருகதையும் இல்லை.

அடிமை ஆட்சி நடத்திய பழனிசாமி!

ஆளுநர்களுக்கு அடிபணிந்து அவர்களை நாட்டாமை செய்ய விட்ட அடிமை ஆட்சிதான் பழனிசாமியின் அவல ஆட்சி. ஆளுநர்களின் சண்டித்தனத்தை அடக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பைப் பெற்று இன்று இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது திராவிட மாடல் ஆட்சி! வரிப்பகிர்வு, வெள்ள நிவாரணம், கல்வி நிதி எனப் பல்வேறு வழிகளில் தமிழ்நாட்டின் நிதி உரிமைகளை முடக்கும் பாஜகவைக் கேள்வி கேட்கத் துப்பில்லை. வக்கில்லை. திராணி இல்லை இந்த வீர வசனங்கள் எல்லாம் நமக்குத் தேவைதானா பழனிசாமி?

தமிழ்நாட்டின் எந்த உரிமையைப் பெற பாஜகவுடன் கூட்டணி வைத்தார் என்று சொல்ல எதாவது பதில் வைத்திருக்கிறாரா பாதம் தாங்கி பழனிசாமி? தனது மகனுக்காகவும் சம்பந்திக்காகவும் பாஜகவோடு கூட்டணி வைத்துவிட்டு, பாஜகவின் செய்தி தொடர்பாளராக பழனிசாமி மாறுவதற்குப் பதில் கமலாலயத்தின் ஒரு மூலையிலேயே அதிமுகவின் அலுவலகத்தை அமைத்துக் கொள்ளலாம். பழனிசாமியின் அபத்தங்கள் தமிழ்நாட்டு மக்களிடம் ஒருநாளும் வெற்றியடையாது. மக்களுக்கு உண்மைகள் தெரிந்ததால்தான் பத்து தோல்வி பழனிசாமி எனப் பட்டம் கொடுத்து உட்கார வைத்திருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்.

அனகாபுத்தூர் – அடையாறு ஆற்றங்கரையோரம் வசித்து வரும்

593 குடும்பங்களுக்கு தலா ரூ.17 இலட்சம் மதிப்பிலான வீடு வழங்கப்படும்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 22-

அனகாபுத்தூர் - அடையாறு ஆற்றங்கரையோரம் வசித்து வரும் 593 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் ஒரு வீடு ரூ.17 லட்சம் மதிப்பில் வீடுகள் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

அடையாறு நதியை சீரமைக்க தமிழ்நாடு அரசின் புதிய நிறுவனமான சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனம் (CRTCL) மூலம் ரூபாய் 1500 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தினை செயல்படுத்த நடப்பு ஆண்டில் தமிழக அரசு ரூபாய் 300 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அடையாறு நதியை முழுவதுமாக புனரமைத்து கரையோரம் உள்ள பகுதிகளில் கழிவுநீர் கலப்பதை அறவே தடுத்து, நீர்வாழ் உயிரினங்கள் வாழும் சிறந்த சூழலை உருவாக்க வேண்டும் என்றால், கரையோரம் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் அதன் மூலம் மாசுபடுவதை தடுக்கவும் கரையோரம் உள்ள குடியிருப்புகளை மறுகுடியமர்வு செய்வது அவசியமாகும்.

இதன் ஒரு பகுதியாக அனகாபுத்துரில் அடையாறு ஆற்றங்கரையோரம் உள்ள காயிதே மில்லத் நகர், தாய் மூகாம்பிகை நகர், சாந்தி நகர், எம்ஜிஆர் நகர் 3வது தெரு ஆகிய இடங்களில் வசித்து வரும் 593 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் தைலாவரம், கீரப்பாக்கம், பெரும்பாக்கம் மற்றும் நாவலூர் ஆகிய இடங்களில் 390 சதுர அடியில் இலவசமாக வீடுகள் கட்டப்பட்டு வழங்கப்பட உள்ளன. (ஒரு வீடு 17 லட்சம் ; 390 சதுர அடி)

மேலும், அடையாறு ஆற்றங்கரையில் உள்ள ஜோதி ராமலிங்கம் நகர், திடீர் நகர், ஜோதி அம்மாள் நகர், சூர்யா நகர், மல்லிகைப்பூ நகர்ஆகிய 5 இடங்களில் வசித்து வரும் குடும்பங்களுக்கு 390 சதுர அடி பரப்பளவில் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக சுமார் ரூபாய் 17 லட்சம் மதிப்பிலான வீடுகள் கட்டப்பட்டு இலவசமாக வழங்கப்பட உள்ளன.

மேலும், பயனாளிகளுக்கு குடும்பம் ஒன்றுக்கு இடமாற்றுப்படியாக ஒரு முறை ரூபாய் 5000, வாழ்வாதார உதவிக்காக மாதம் ரூபாய் 2500 என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்கு ரூபாய் 30000, மின்சார இணைப்பு கட்டணம் ரூபாய் 2500 என்ற அடிப்படையிலும் ஒவ்வொரு குடியமர்விற்கும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக விரிவான சமுதாய வளர்ச்சி திட்டங்கள், உடனடி குடும்ப அட்டை மாற்றம் செய்தல், விதவை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உடனடி சமூக பாதுகாப்பு திட்ட உதவி மாற்றம் செய்தல், கல்வி, அங்கன்வாடி, தொடக்க, நடுநிலை மற்றும் மேல்நிலை பள்ளி சேர்க்கை போன்ற அனைத்து திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாண்பமை உயர்நீதிமன்ற நீதிமன்ற உத்தரவின்படி ஆற்றங்கரையில் வசித்து வரும் ஆக்கிரமிப்பாளர்கள் மறு குடியமர்வு செய்யப்பட்டு வருகின்றனர். மறு குடியமர்விற்கு ஒப்புதல் தராத ஆக்கரமிப்பாளர்களை உடனடியாக அப்புறப்படுத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், நதிநீர்சீரமைப்பு திட்டம் என்பதாலும், மழைக்கால வெள்ளத்தடுப்பு காரணங்களுக்காக ஆற்றங்கரையில் வசிக்கும் ஆக்கரமிப்பாளர்களை அரசு உரிய உதவிகளுடன் மறு குடியமர்வு செய்து வரும் அரசின் இந்த செயலுக்கு அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
18	மே.பொநி-I/வ.செ.அ.மி.நி	Attending preventive maintenance and breakdown works in air compressors in Unit I, II, III
19	மே.பொநி-I/வ.செ.அ.மி.நி	Renewal of wornout damaged existing 600, 450, 300 NB pipes for SCS, SWBP, AWSP and PHE in Unit I, II, III
20	மே.பொநி-I/வ.செ.அ.மி.நி	Dismantling 600 NB seawater header pipe from inlet takeup line to Ash tunnel and complete cleaning
35	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	Centre Coal Feed Pipe Type-I for HP 803 Bowl Mills
36	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	Spares for Water wall soot Blowers of Model WB-1E for boilers of unit-I
39	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	Spares for Water wall soot Blowers of Model WB-1E for boilers of unit-II
40	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	Design Manufacturing and Supply of Economiser coil tubes and bends for unit-I
41	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	450 NB and 600 NB hand operated butterfly valves for sea water
43	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	300 NB Knife edge Gate valve
44	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	Roller Journal assembly
38	மே.பொ/கொ&தி/வ.செ.அ.மி.நி-I	28 inch coal nozzle assy reach rod seal plate guide pipe Forged C clamp for 600 MW Boiler

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணைய தளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணைய தளங்களை காணவும்: www.tangedco.go.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/2472/ஒப்பந்தப்புள்ளி/2025

மதுரைக்கு வருகை தரும் முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பு!

மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி, கோ.தளபதி எம்.எல்.ஏ., மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, மே 22 -

வரும் ஜூன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க வருகை தருவதையொட்டி சிறப்பான வரவேற்பு கொடுப்பது, விழாவை எழுச்சியுடன் சிறப்பாக நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (23ஆம் தேதி) நடைபெற உள்ளதாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க நாடே போற்றும் வகையில் தமிழ்நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கழக மாநில பொதுக்குழு கூட்டம் வருகிற ஜூன் 1ம் தேதி எழுச்சியுடன் மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த சிறப்புமிக்க பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளார்.

வரலாறு படைக்க வருகை தரும் கழகத் தலைவரை எழுச்சியுடன் வரவேற்று, வரலாறு படைக்கும் வகையில் பொதுக்குழு கூட்டம் நடத்துவது குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட திமுகவுக்குட்பட்ட மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் மாவட்ட மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (23.05.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு மதுரை உத்தங்குடியில் அமைந்துள்ள ஜெ.எப்.ஏ. லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்த சிறப்புமிக்க செயல்வீரர்கள் கூட்டத்திற்கு மதுரை வடக்கு, தெற்கு மற்றும் மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக, கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் மு. மணிமாறன் ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி

இயந்திர துறை வடக்கு

வ.வ.அ.இ.பொ.து.ந.க.எண்.B4/197/2025

குறுகிய கால மின்னணு ஒப்பம்

கீழ்கண்ட பணிக்கு கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகியகால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

பணியின் விவரம்:- பெருநகர சென்னை மாநகராட்சியின், மண்டலம் - 5 லாரி நிலையத்தில் உள்ள 452 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்களை வருடாந்திர பராமரிப்புக்காக ஒப்பந்த அடிப்படையில் 90 நாட்களுக்கு பணியமர்த்துதல்

பணியின் மதிப்பு :- ரூ.52,88,400/- முன் வைப்புத் தொகை :- ரூ.53,000/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **02.06.2025 மாலை 03.00 மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : **03.06.2025 மாலை 3.15 மணி**

மேலும் விபரங்களுக்கு : **http://tntenders.gov.in**

செ.ம.தொ.இ / 2479 / ஒப்பந்தப்புள்ளி / 2025

மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)

மேயர் ஆர். பிரியா, நேற்று (21.05.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த.விசுவநாதன் (கல்வி), தா.இளையஅருணா (நகரமைப்பு), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் பிருந்தா ஸ்ரீ, இளம் சுருதி, சங்கர் கணேஷ், கமல், தேவி கதிரேசன், பவித்ரா, சரவணன், துர்கா, பா.சுப்பிரமணி, அமிர்தவர்ஷினி, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் 22வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இதில் தா.ராமையா, தா.இரா.நெடுஞ்செழியன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.